

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (7.12.2024) தலைமைச் செயலகத்தில், காவல்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை இயக்குநர்கள், கூடுதல் இயக்குநர்கள், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ‘தி இந்து குழுமம்’ - நறுவீ மருத்துவமனை இணைந்து நடத்தும்

# ‘மகிழ்வான இந்தியா ; ஆரோக்கியமான இந்தியா’ நிகழ்ச்சி!

## வேலூரில் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து வாழ்த்துரை!

**வேலூர், டிச. 9 –**

**‘தி.இந்து குழுமம்’ – நறுவீ மருத்துவமனை இணைந்து நடத்தும் ‘மகிழ்வான இந்தியா – ஆரோக்கியமான இந்தியா’ நிகழ்ச்சியினை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் வேலூரில் தொடங்கி வைத்து வாழ்த்தி உரையாற்றினார்.**

துணை முதல்வர் அவர்களின் வாழ்த்துரை வருமாறு:

‘திஇந்து’குழுமம்மற்றும்வேலூர்நறுவீ மருத்துவமனையின் ‘ஆரோக்கியமான இந்தியா மகிழ்ச்சியான இந்தியா’ நிகழ்ச்சியில் பங்கேற்றுத் துவக்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நம் சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் இந்த உன்னதமான முயற்சிக்காக கைகோர்த்துள்ள தி இந்து குழுமம் மற்றும் நறுவீமருத்துவமனைநிறுவனங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர்டாக்டர்கலைஞர்அவர்கள், நோய்வருவதற்கு முன்பேநோயிடமிருந்து நம்மை காத்துக்கொள்ளும் வகையில், `வரும்முன் காப்போம்’ திட்டத்தை உருவாக்கினார்கள்.

**மகிழ்ச்சியான இந்தியா**

`ஆரோக்கியமான இந்தியா மகிழ்ச்சியான இந்தியா, நோயைத் தடுப்போம், ஆரோக்கியத்தைப் பாதுகாப்போம்’ என்ற இந்த முன்னெடுப்பின் தலைப்பைப் பார்க்கும்போது, எனக்கு முதலில் நினைவுக்கு வருவது டாக்டர் கலைஞரின் `வருமுன் காப்போம்’ திட்டம்தான்.

Prevent Illness, Protect Wellness என்று சொன்னால், நாம் நம்முடைய உடல்நலனைக்காக்கத்திட்டமிட்டு,ஆரோக்கியமான வாழ்க்கைமுறையைஅமைத்துக்கொள்ள வேண்டும். அதைத்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்றே, `வரும் முன் காப்போம்’ என்றார்கள்.

**உலக அளவில் சாதனைகள்**

இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் சுகாதாரத்துறை வளர்ச்சியை அடுத்தகட்டத்துக்குஎடுத்துச்சென்றுகொண்டிருக்கிறார்கள். திராவிட மாடல் அரசு, இன்றைக்கு மருத்துவத்துறையில் உலக அளவில்ஏராளமானசாதனைகளைப்படைத்து வருகிறது. `மக்களைத் தேடி மருத்துவம்’, `இன்னுயிர் காப்போம்’ `நம்மை காக்கும் 48’ போன்ற முன்னோடித் திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறது.

நமது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையானது,அதன்முன்னோடி சுகாதாரப்பாதுகாப்புமுன்னெடுப்பான`மக்களை தேடி மருத்துவம்’ திட்டத்திற்காக, 2024ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க ஐ.நா. சபை `இன்டர் ஏஜென்சி டாஸ்க் ஃபோர்ஸ்’ (UNIATF) விருதை வழங்கி கௌரவித்துள்ளது.

**2 கோடி மக்களின் வாழ்க்கை**

மக்களின் இல்லம் தேடிச் சென்று அத்தியாவசியமருத்துவசேவைகளைவழங்கும் இத்திட்டம், தமிழ்நாடு முழுவதும் சுமார் 2 கோடி மக்களின் வாழ்க்கையைத் தொட்டு அவர்களது வாழ்வில் மகத்தான மாற்றத்தைஏற்படுத்தியுள்ளது. சமீபத்தில்வெளியான ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அறிக்கை13முக்கியதுறைகளில்தமிழ்நாடு நாட்டிலேயே முன்னணி மாநிலமாக இருப்பதை உறுதிசெய்துள்ளது. அந்த13 துறைகளில் நாட்டிற்கே முன்னோடியான தமிழ்நாடு சுகாதாரத் துறையும் ஒன்று என்பதை பெருமையுடன்தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகப்பெரும் தாக்கம்

இன்றைக்கு ஒன்றிய அரசு மாவட்டந்தோறும்மருத்துவக்கல்லூரிகளைஅமைப்போம்என்று கூறிவருகிறது. ஆனால், அதற்கான முயற்சிகளை 2006ஆம் ஆண்டு காலகட்டத்திலேயேஎடுத்தவர்நம்முடைய கலைஞர் அவர்கள். உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்குஅவர்களின்இறுதிச்சடங்கின் போது மாநில அரசு மரியாதை வழங்கும் என நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்வெளியிட்டஅறிவிப்புமிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த அறிவிப்பைத்தொடர்ந்துஉறுப்புதானம்செய்ய முன் வருபவர்களின் எண்ணிக்கை 42 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

அரசின்முன்னெடுப்புகளும்கொள்கை முடிவுகளும் எத்தகைய சமூக பொறுப்புணர்வை மனித நேயத்தை கட்டியெழுப்ப உதவும் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.உறுப்புதானம்செய்பவர்களுக்கு அங்கீகாரம் மற்றும் கௌரவத்தை வழங்குவதன்மூலம்,தங்கள்வாழ்வுக்குப்பிறகும் பிறமனிதஉயிர்களுக்குவாழ்வளிக்கமுன் வரும் கருணையுள்ளங்களின் எண்ணிக்கையை நமது அரசு கூட்டியுள்ளது.

**அரசின் இத்தகைய திட்டங்கள்**

உடல்உறுப்பு தானம் குறித்து விழிப்புணர்வை பரப்புவதில் ‘தி இந்து’ போன்றநிறுவனங்களின்முயற்சிகளுக்குஇந்தசமயத்தில்எனதுநன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். நம் மக்களும் `தி இந்து’ குழுமம் மற்றும் நறுவீ மருத்துவமனை போன்ற நிறுவனங்களும் இணைந்து தீவிரமாகப்பங்களிக்கும்போதுதான்நமது அரசின் இத்தகைய திட்டங்கள் வெற்றிபெறும். அவர்களின் துணையோடு இந்த முன்முயற்சிகள் இன்னும் அதிக மக்களை சென்றடைவதையும்அதிகதாக்கத்தைஏற்படுத்துவதையும்நாம்உறுதிசெய்யமுடியும்.

“மகிழ்ச்சியான இந்தியா ஆரோக்கியமான இந்தியா” முன்னெடுப்பில் தி இந்து குழுமம் மற்றும் நறுவீ மருத்துவமனை மென்மேலும் வெற்றிபெற எனது மனமார்ந்தவாழ்த்துகளைத்தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களின் முயற்சிகள் உயிர் காக்கும் உறுப்பு தானத்தை ஊக்குவித்து, இன்னும் பெரிய சாதனைகளுக்கு வழிவகுக்கும் என்று நம்புகிறேன்.

**அன்பு வாழ்த்துகள்**

இன்றைக்கு ‘தி இந்து’ குழுமம் மற்றும் ‘நறுவீ’ மருத்துவமனையால் தொடங்கப்படும்,இந்தமுயற்சி,நாளைமாபெரும்மக்கள் இயக்கமாகட்டும். மக்கள் நலனுக்காக பொதுநல நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் வெல்லட்டும். இதில் ஈடுபடவுள்ளமருத்துவர்கள்–செவிலியர்கள் தன்னார்வலர்கள் அனைவருக்கும் என் அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் துரைமுருகன், ஆர். காந்தி, மா.சுப்பிரமணியன், சட்டப்பேரவை உறுப்பினர்கள்நந்தகுமார்,கார்த்திகேயன் நறுவீ மருத்துவமனை தலைவர் டாக்டர். ஜி.வி.சம்பத், தி இந்து குழுமத் தலைவர் என்.ராம், இயக்குநர் என். முரளி எல்.வி. நவநீத், ஷஃபீர் ரஹ்மான், பி.என்.சதீஷ், தலைமை செய்தியாளர் ரம்யா கண்ணன் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அகில இந்திய சமூக நீதிக் கூட்டமைப்பு 03.12.2024 அன்று புதுடெல்லியில் சாதிவாரிக் கணக்கெடுப்பு, பெண்ணுரிமை, இடஒதுக்கீடு ஆகிய சமூக நீதிக் கோட்பாடுகளை கொண்டு நடத்திய தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றியதறிவோம்! இந்தியா முழுவதும் உள்ள 23 கட்சிகளை சார்ந்த பிரதிநிதிகள் 50க்கும் மேற்பட்டோர் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஓய்வு பெற்ற நீதியரசர்கள், சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள் கலந்து கொண்ட மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நாடாளுமன்ற கழக உறுப்பினர் பி.வில்சன், சென்னை – அண்ணா அறிவாலயம் – கழக அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.12.2024) முகாம் அலுவலகத்தில், கும்பகோணம் மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன், தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# ஒலக்கூர் ஒன்றியம் - தாதாபுரத்தில் பேருந்து சேவை!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் தொடங்கி வைத்தார்!

*திண்டிவனம், டிச.9-*

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் இருந்து அரசு கலைக் கல்லூரி,வைரபுறம் அம்மணம் பாக்கம் வழியாக தாதாபுரத்துக்கு புதிய பேருந்து சேவையை கடந்த தி.மு.க. ஆட்சியில் முதலமைச்சர்கலைஞரால் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் இந்த வழித்தடத்தில் சென்ற அரசு நகர பேருந்து நிறுத்தப்பட்டது.

இதை அடுத்து இவ் வழித்தடத்தில் மீண்டும் பேருந்து சேவையை தொடங்க வேண்டுமென தாதாபுரம் பொதுமக்கள் அரசுக்கும், போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கரிடம் கோரிக்கை மனுஅளித்தனர்.

பொதுமக்களின் கோரிக்கை ஏற்று திண்டிவனம் தாதாபுரம்வழித்தடத்தில் புதிய பேருந்து சேவையை இயக்குவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டார்.

இதையடுத்து தாதாபுரம் ஊராட்சியில் புதிய பேருந்து சேவை தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர் கலந்து கொண்டு திண்டிவனம் தாதாபுரம் பேருந்து சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்துபொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

அப்போது அவர் செய்தியாளரிடம் கூறுகையில்:

கடந்த திமுக ஆட்சியில் கலைஞர் அவர்கள் திண்டிவனம் தாதாபுரத்திற்கு புதிய பேருந்து சேவை தொடங்கி வைத்தார் ஆனால் கடந்த பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் இந்த சேவை நிறுத்தப்பட்டது மீண்டும் இப்பொழுதில் புதிய பேருந்து சேவையை இயக்க வேண்டுமென பொதுமக்கள் முதலமைச்சருக்கும், போக்குவரத்து துறை அமைச்சருக்கும் கோரிக்கைமனு கொடுத்ததின் பேரில்இன்று தாதாபுரத்தில் இருந்து திண்டிவனத்திற்கு போக்குவரத்து சேவையை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற வகையில் திராவிட மடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு தாதாபுரம் கிராம மக்கள் சார்பாகவும் மாவட்ட கழகத்தின் சார்பாகவும்முதலமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இதில் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளரும், ஒன்றிய துணை சேர்மன் ராஜாராமன், பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை, திண்டிவனம் அரசு பணிமனை மேலாளர் சிவகுமார், தொ.மு.ச. ராஜேந்திரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் அண்ணா துரை, தொ.மு.ச. நிர்வாகி கள் உள்ளிட்ட ஒன்றிய, ஊராட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அரியலூர் வடக்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில், கழக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அவர்களின் பிறந்தநாள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரம் தவுத்தாய்க்குளம் கிராமத்தில் ஒன்றிய அவைத்தலைவர் முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தலைமை கழக சொற்பொழிவாளர்கள் காவேரிப்பட்டினம். இளையராஜா, என் உயிரிலும் மேலான இளம் கழக சொற்பொழிவாளர் விஜயகுமார் ஆகியோர் உரையாற்றினார். உடன் ஒன்றிய கழக செயலாளர் கோ.அறிவழகன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களில் பெஞ்சல் புயல் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைச்சர் எ.வ.வேலு நிவாரண பொருட்களை வழங்கினார்,அருகில் எம்.எல்.ஏக்கள் வசந்தம் க.கார்த்திகேயன், தா.உதயசூரியன், ஆ.ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் உடன் உள்ளனர்.

### அரியலூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# கழக அரசின் தெருமுனை பிரச்சாரக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர்-விஜயகுமார்-காவேரிப்பட்டினம் இளையராஜா பங்கேற்பு!

*அரியலூர், டிச. 9-*

அரியலூர் மாவட்டம் அரியலூர் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில், கழக இளைஞரணி செயலாளரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் தவுத்தாய்க்குளம் கிராமத்தில் ஒன்றிய அவைத்தலைவர் முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய கழக நிர்வாகிகள் நெடுஞ்செழியன், தர்மலிங்கம், கனக சுப்புலட்சுமி, கந்தசாமி, சரவணன், ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தலைமை கழக சொற்பொழிவாளர் காவேரிப்பட்டினம். இளையராஜா என் உயிரிலும் மேலான இளம் கழக சொற்பொழி வாளர் விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

நடைபெற்றக் கூட்டத்தில் அரியலூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கோ.அறிவழகன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட அமைப்பாசாரா ஒட்டுனர் அணி அமைப்பாளர்

ஜெயக்குமார், ஆனந்த், அன்பழகன் கருப்பையா தமிழரசன், செந்தில், முத்தமிழ், செல்வராஜ், இளம்பரிதி, சந்திர.கௌதம் கதிரவன், மேகலா ராணி மதியழகன் பாப்பா செல்வம், இராஜகுமாரி அறிவழகன், அபிநயா இளையராஜா, ஆர்த்தி சிவகுமார், கலைச்செல்வி நெடுஞ்செழியன், தர்மன் மேகலா, ராணி மதியழகன், மற்றும் மாவட்ட, ஒன்றிய,கிளைக் கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். இறுதியாக ஒன்றிய பொருளாளர் செல்லதுரை நன்றி கூறினார்



விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தாதாபுரம் வழித்தடத்தில் நிறுத்தப்பட்ட பேருந்து சேவையை முதலமைச்சரின் உத்தரவுப்படி மீண்டும் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் மேற்கு ஒன்றியச் செயலாளர் ராஜாராமன்,பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை,திண்டிவனம் பணிமனை மேலாளர் சிவகுமார் உள்ளனர்.